செய்தி வெளியீடு எண்: 034 நாள் : 17.01.2014

## செய்தி வெளியீடு

தமிழக மீனவர்கள் கடல் எல்லையை கடந்து வந்து மீன்பிடிப்பதாக குற்றம் சாட்டப்பட்டு இலங்கைப் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்படும் போது அவர்களை மீட்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உடனடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இதன் காரணமாக கடந்த இரண்டரை ஆண்டுகளில் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டபோதும், அவர்கள் துரிதமாக விடுவிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சனைக்கு தீர்வு காண, தமிழக மற்றும் இலங்கை மீனவர்கள் சந்தித்து பேசுவதற்கான ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என மீனவச் சங்கங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை விடுத்ததன் அடிப்படையில் 2013-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இரு நாடுகளைச் சேர்ந்த மீனவர்களுக்கு இடையேயான பேச்சுவார்த்தையினை சென்னையில் வைத்துக் கொள்ளலாம் என்றும், இதற்கு உரிய அனுமதியினை அளிக்க சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுரை வழங்குமாறும் இலங்கை மீனவர்கள் சார்பில் கூட்டத்தில் கலந்துக் கொள்பவர்களின் பட்டியலை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 20.9.2013 அன்று ஒரு கடிதம் அனுப்பியிருந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின் பேரில் தமிழ்நாடு அரசு தனது 23.12.2013 நாளிட்ட கடிதத்தில், இரு நாட்டு மீனவர்கள் கூட்டத்தை ஜனவரி 20-ஆம் தேதி அன்று வைத்துக் கொள்ளலாம் என தெரிவித்து, அந்தக் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் கூட்டத்தில் கலந்துக் கொள்வோர் விவரப் பட்டியலை அனுப்பி வைத்தது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின் பேரில் 20.1.2014 அன்று சென்னையில் நடைபெற உள்ள இரு நாட்டு மீனவர்களின் கூட்டம் தொடர்பாக, தமிழக அரசின் மீன்வளத்துறை செயலாளர் மைய அரசிலுள்ள அதிகாரிகளுடன் விவாதித்தார். அப்போது இரு நாட்டு மீனவர்களின் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு, சிறையில் இருக்கும் மீனவர்களை விடுவித்தால், பேச்சு வார்த்தை சுமுகமாக நடைபெற வழி வகுக்கும் என தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

அதன் அடிப்படையில் இலங்கை சிறையில் வாடிக் கொண்டிருக்கும் தமிழக மீனவர்களை 13.1.2014 முதல் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு எடுக்குமென தெரிவித்த மத்திய அரசு, தமிழக சிறையில் அடைக்கப்பட்டுள்ள 179 இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கையை தமிழக அரசு எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டது. அதன்படி, தமிழக சிறையிலுள்ள இலங்கை மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை துவக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 11.1.2014 அன்று உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முயற்சியின் பயனாக தமிழ்நாட்டைச் சேர்ந்த 30 மீனவர்கள் மற்றும் புதுச்சேரி மாநிலம் காரைக்காலைச் சேர்ந்த 22 மீனவர்கள் என மொத்தம் 52 மீனவர்கள் 13.1.2014 அன்று விடுவிக்கப்பட்டனர். அதேபோன்று, புழல் சிறையிலிருந்து 52 இலங்கை மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். தமிழகத்தைச் சேர்ந்த 30 மீனவர்களும் 16.1.2014 அன்று காரைக்கால் வந்தடைந்தனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவுப்படி மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகள் அவர்களை வரவேற்று தமிழக அரசு செலவில் சொந்த ஊருக்கு அனுப்பி வைத்தனர்.

இன்று (17.1.2014) இலங்கை சிறையிலிருந்து தமிழகத்தைச் சார்ந்த 121 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுளளனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவுப்படி 61 இலங்கை மீனவர்கள் இன்று விடுவிக்கப்பட்டுள்ளனர். இலங்கை நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட 121 தமிழக மீனவர்கள் இன்னும் ஒரிரு தினங்களில் தமிழகம் வந்து சேர்வார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9
நாள்:- 17.1.2014.